## பாமாயில் ஊழல் வழக்கை மேலும் விசாரிக்க அனுமதி

First Published : 15 Mar 2011 03:48:24 AM IST

திருவனந்தபுரம், மார்ச் 14: ஊழல் தடுப்பு ஆணையர் பதவியிலிருந்து பி.ஜே.தாமஸ் நீக்கப்படக் காரணமாக இருந்த பாமாயில் ஊழல் வழக்கை மேலும் விசாரிக்க திருவனந்தபுரம் ஊழல் தடுப்பு நீதிமன்றம் திங்கள்கிழமை முறைப்படி அனுமதி வழங்கியது. இதனால், ஐக்கிய ஜனநாயக முன்னணி (காங்கிரஸ் கூட்டணி) முதல்வர் வேட்பாளராக வாய்ப்புள்ள உம்மன் சாண்டிக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது.

1991-92ல் மலேசியாவில் இருந்து கேரளத்துக்கு பாமாயில் இறக்குமதி செய்ததில் ரூ.2.32 கோடி அளவுக்கு ஊழல் நடந்திருப்பதாகப் புகார் எழுந்தது. அப்போது மாநில உணவு அமைச்சராக இருந்த முஸ்தபா, உணவுத்துறை செயலாளராக இருந்த பி.ஜே.தாமஸ் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த வழக்கில் இன்னும் சிலரது பெயரைச் சேர்க்க வேண்டிவரும் என்பதால் வழக்கை மேலும் விசாரிக்க அனுமதி கோரி அரசு தரப்பில் ஊழல் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவை திங்கள்கிழமை விசாரித்த நீதிபதி எஸ்.ஜெகதீஷ், குற்றவியல் சட்டம் 173(8)ன்படி வழக்கை மேலும் விசாரிக்க அரசு தரப்புக்கு உரிமை இருப்பதால் அதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

விசாரணையை 3 மாதங்களுக்குள் முடித்துக்கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார். எனினும் யாருடைய பெயரையும் நீதிபதி குறிப்பாகத் தெரிவிக்கவில்லை.

## "இயற்கை வேளாண்மையை பள்ளி பாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டும்'

First Published : 14 Mar 2011 01:03:09 PM IST

தக்கலை, மார்ச் 13: இயற்கை வேளாண்மையைப் பள்ளிபாடத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் தெரிவித்தார்.

மூலச்சலில் சனிக்கிழமை நடைபெற்ற கன்னியாகுமரி மாவட்ட நஞ்சில்லா வேளாண்மை சங்க 12-வது ஆண்டு விழா மற்றும் பயிற்சி விழாவில் பங்கேற்ற பின் அவர் கூறியதாவது:

இந்தியாவில் 60 விழுக்காடு நிலங்கள் பெரும்பாலும் நேரடியாக மழை நீரை நம்பியே உள்ளன. இங்கு பயிரிடப்படும் சத்துமிகு தானியங்கள் பெரிதும் மறைந்து வருவது கவலைக்குரியது.
இன்று மக்களுக்கு சத்துணவு பற்றாக்குறை மிக பெரிய சிக்கலாக இந்தியாவில் காணப்படுகிறது.

மக்களுடைய முன்னேற்றத்திலும் நல்வாழ்விலும் அக்கறை கொண்டுள்ள சமூக சேவை அமைப்புகளின் முயற்சியால் சுமார் 50 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் தேடி எடுக்கப்பட்டு பயிரிடப்பட்டு உழவர் மத்தியில் பரப்பப்பட்டுள்ளன.
ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில் இந்தப் பயிர்கள் மீட்டு எடுக்கப்பட்டு சாகுபடி செய்யப்படுகின்றன. நம் பள்ளி பாடத் திட்டத்தில் இயற்கை வேளாண்மையை சேர்க்க வேண்டும்.
தமிழகம் மின்பற்றாக்குறை மாநிலமாக திகழ்கிறது. இயற்கை வேளாண்மையைப் பயன்படுத்தினால் மின்சாரம் அதிக அளவில் தேவைப்படாது.
ஒற்றை நாற்று நடவின் மூலம் அதிக மகசூலைப் பெறமுடியும். அதற்கு அரசு அதிகாரிகளுக்கு போதிய பயிற்சி அளிக்க வேண்டும்.
மாடுகள் இல்லாமல் இயற்கை வேளாண்மை கிடையாது. எனவே மாடுகள் இறைச்சிக்காக கடத்திக் கொண்டு செல்வதை ஒவ்வொரு மாவட்ட எல்லையிலும் தடுக்க வேண்டும். சர்க்கரை நோய், புற்றுநோய்க்கு மருந்தே இல்லை என கூறுகின்றனர். இதை தவிர்க்க ஆரோக்கியமான உணவு, ஆரோக்கியமான சுற்றுச்சூழல், பழக்கவழக்கங்கள், இயற்கை வேளாண்மையால்தான் சாத்தியம் உண்டு என்றார் அவர்.

**"விவசாயத்தின் அனைத்து செலவுகளையும் அரசுகள் ஏற்க வேண்டும்'**

First Published : 14 Mar 2011 01:11:33 PM IST

தக்கலை, மார்ச் 13: விவசாயத்தின் அனைத்து செலவுகளையும் மத்திய, மாநில அரசுகள் ஏற்க வேண்டும் என கன்னியாகுமரி மாவட்ட நஞ்சில்லா விவசாய சங்க மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
÷மூலச்சலில் நடைபெற்ற இம்மாநாட்டுக்கு மாவட்டத் தலைவர் டி. தாஸ் தலைமை வகித்தார். செயலர் செளந்தரபாண்டியன் அறிக்கைகள் வாசித்தார்.
÷கிரியேட் மண்டலத் தலைவர் ஆர். பொன்னம்பலம், திருவனந்தபுரம் தணல் ஸ்ரீதர், நஞ்சில்லா வேளாண்மை பயிற்றுநர் ராஜகுமார், பேச்சிப்பாறை தோட்டக்கலை அறிவியல் நிலைய பேராசிரியர் ரிச்சர்டு கென்னடி, விலவூர் பேரூராட்சித் தலைவர் விஜயகுமாரி மனோகரன், திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி துணை முதல்வர் என். ஆசைதர்மராஜ், ரூரல் அப்லிப்ட்

சென்டர் செயலர் மரியஜேம்ஸ், டி. தேவதாஸ் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் மாநாட்டில் பேசினர்.

÷மாநாட்டில் விளைபொருள் கண்காட்சி அரங்கை பாஸ்டர் சி. ஞானதாஸ் திறந்து வைத்தார். மாநாட்டு மலரை இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் வெளியிட்டுப் பேசினார்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

÷விவசாயத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பூச்சிக்கொல்லி கம்பெனிகள், உரக் கம்பெனிகள் மற்றும் விவசாயம் சார்ந்த இயந்திர தயாரிப்பு கம்பெனிகள் மானியம் என்ற பெயரில் பெருமளவில் பெறுவதை தடை செய்யவேண்டும். விவசாய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கே அரசின் மானியங்கள் நேரடியாக கிடைக்க வேண்டும்.

÷நீர்ப்பாசனத் துறையில் மத்திய அரசின் பொதுமுதலீட்டை அதிகரிக்கவேண்டும். நீர்வள, கூட்டுறவுத் துறை மேம்பாட்டுக்கு சிறப்பான கவனம் மேற்கொள்ளப்பட வேண்டும். விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்து விவசாயத்துக்கு உதவ வேண்டும். பாலுக்கு உற்பத்திக்கேற்ற விலை நிர்ணயம் செய்ய வேண்டும். குறைந்தபட்சம் பாலுக்கு லிட்டருக்கு ரூ. 30 வீதம் நிர்ணயித்து கொள்முதல் செய்ய வேண்டும்.

÷சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கோ, வீட்டு மனைகளுக்கோ, பிற வளர்ச்சித் திட்டங்களுக்கோ எக்காரணத்தைக் கொண்டும் விளை நிலங்களை பயன்படுத்துவதை தடை செய்யவேண்டும்.

÷மண்வளத்தைக் காப்பதற்கு வேளாண் பல்கலைக்கழகங்கள், இந்திய விவசாய ஆராய்ச்சி கவுன்சில், வேளாண் அறிவியல் மையம், வேளாண் துறைகள் , விவசாயச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் விவசாயிகளுடன் இணைந்து செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

÷விவசாயிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்படும் நிதி, உரங்கள் மற்றும் மானியத்தை, பிற தொழில்களில் ஈடுபடுவோர் தங்களை விவசாயிகள் என ஏமாற்றி பயன் பெறுவதை தடைசெய்து அவர்களை தண்டிக்க வேண்டும்.

÷தண்ணீர் பொது சொத்தாக இருப்பதை மத்திய, மாநில அரசுகள் உறுதி செய்யவேண்டும்.

÷வனங்களைப் பாதுகாத்து பல்லுயிர்த் தன்மையை பேண வேண்டும். நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும்.

÷கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகள் பயன்படும் விதத்தில் மாவட்டத்துக்கு ஏற்றவாறு தனித்திட்டங்கள் வகுத்து அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும்.

÷விவசாயிகளுக்காக விவசாயத் தொழிலாளர் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு தனி நலவாரியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள்
மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

**காலாவதியான உணவு பொருள்கள் பறிமுதல்**

First Published : 14 Mar 2011 12:04:22 PM IST

காரியாபட்டி, மார்ச் 13: திருச்சுழியில் உள்ள கடைகளில் சுகாதாரத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு நடத்தி, காலாவதியான உணவுப் பொருள்களைப் பறிமுதல் செய்தனர்.

இதுதொடர்பாக வந்த தகவல் அடிப்படையில், சுகாதாரத்துறை துணை இயக்குநர் டாக்டர் பாலசுப்பிரமணியம் உத்தரவின்பேரில், நேர்முக ஆய்வாளர் ராமகிருஷ்ணன், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் சங்கரபாண்டியன், உணவு ஆய்வாளர் போஸ் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டனர். டீக்கடைகள், ஹோட்டல்கள், பலசரக்குக் கடைகளில் இந்த ஆய்வு நடைபெற்றது. ஹோட்டல்களில் வைக்கப்பட்டிருந்த கெட்டுப் போன மாவு பறிமுதல் செய்யப்பட்டது. கடைகளில் விநியோகம் செய்த தரமற்ற குளிர் பானங்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

காலாவதியான உணவுப் பொருள்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**செம்மறி ஆடுகளுக்கு விநோத நோய் தாக்குதல்**

First Published : 14 Mar 2011 10:56:18 AM IST

வெள்ளக்கோவில், மார்ச் 13: வெள்ளக்கோவில் பகுதியில் செம்மறி ஆடுகள் விநோத நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியில் நடைபெறும் விவசாயம் பெரும்பாலும் கிணற்றுப் பாசனத்தையே நம்பியுள்ளதால், உபத் தொழிலாக கால்நடை வளர்ப்பு முக்கிய இடம் பெற்றுள்ளது. இப்பகுதியில் அதிகளவு வளர்க்கப்படும் செம்மறி ஆடுகள் தற்போது புதுவித நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்து வருகின்றன. நான்கு கால்களும் செயலிழந்து நடக்க முடியாதவாறு விநோத நோய் தாக்கி வருகிறது. இதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தகுந்த சிகிச்சையளித்தால் உயிரிழப்பை தடுக்க முடியும் என கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**உர உற்பத்தி மேலாண்மை குறித்த பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,21:56 IST

குறிஞ்சிப்பாடி : அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உழவியல் துறை, வேளாண் புலம் மற்றும் இ.ஐ.டி., பாரி இணைந்துவேளாண் கழிவுகள் மற்றும் நகர்ப்புற கழிவுகளிலிருந்து உர உற்பத்தி மேலாண்மை குறித்து பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் உழவியல் துறை, வேளாண் புலம் உதவி பேராசிரியர் பாபு, இ.ஐ.டி., பாரி நிறுவன குறிஞ்சிப்பாடி கோட்ட விரிவாக்க அலுவலர் திருநாவுக்கரசு பயிற்சி அளித்தனர். பின்னலூர் உழவர் மன்ற தலைவர் குஞ்சிதபாதம், அயன் குறிஞ்சிப்பாடி உழவர் மன்ற தலைவர் ராமலிங்கம், வரதராஜன்பேட்டை உழவர் மன்ற தலைவர்கள் வேதராஜன், ஜெயவேல் ஆகியோர் பங்கேற்றனர்.

பயிற்சி முகாமில் கரும்பு வெட்டிய பின் அதன் கழிவுகளை மறு சுழற்சி முறையில் சோலைகளை பொடியாக்குதல், அவற்றை மக்க வைத்தல், கரும்பு நாற்று வளர்த்தல் உட்பட பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

**கொளுத்தும் வெயிலுக்கு இதமாக வெள்ளரி விற்பனை**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,01:03 IST

ஈரோடு: ஈரோட்டில் வெயில் கொளுத்துவதால் வெள்ளரி விற்பனை சூடுபிடித்துள்ளது. மே மாதம் அக்னி வெயிலுக்கு முன்பே, மக்களை வெயில் வாட்டத் துவங்கி விட்டது. பகலில் மக்கள் வெளியில் வர முடியாத அளவுக்கு வெயில் தாக்கம் நிலவுகிறது. சாலையில் செல்லும் செல்லும் பெண்கள் , வியாபாரம் செய்வோர், ரோட்டில் நடந்து செல்வோர், குடை பிடித்தே செல்கின்றனர். அந்தளவுக்கு வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கிறது. இளநீர், ஜூஸ் உட்பட குளிர்ச்சி தரும் பானங்களை அருந்தி மக்கள் தங்கள் உஷ்ணத்தை தணிக்கின்றனர்.

அந்தியூர், பவானி, கொடுமுடி பகுதிகளில் இருந்து வெள்ளரி கொண்டு வரப்படுகிறது. வெயில் காரணமாக வெள்ளரி விற்பனை அதிகரித்துள்ளது. ஈரோடு நகரில் கொங்கலம்மன் கோவில் பகுதி, நேதாஜி மார்க்கெட், மணிக்கூண்டு ஆகிய இடங்களில் வெள்ளரி அதிகளவில் குவிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**பூ விளைச்சல் அதிகரிப்பு மல்லிகை விலை சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,01:00 IST

ஈரோடு: நடப்பாண்டு பூ விளைச்சல் இருமடங்கு அதிகரித்துள்ளதால், வரத்து அதிகமாக உள்ளது. விவசாயிகளுக்கு போதிய விலை கிடைக்காததால், "சென்ட்' ஆலைக்கு அதிகளவு ஏற்றுமதி செய்கின்றனர். சத்தி வட்டரத்தில் சுமார் 1,800 ஹெக்டேர் பரப்பளவில் மலர் சாகுபடி நடக்கிறது. இப்பகுதியில் இருந்து தினமும் 1,500 கிலோ மல்லிகைப் பூ விற்பனைக்கு வருகிறது.

தமிழகத்தில் திண்டுக்கல், சத்தி, ஓசூர் பகுதியில் நடப்பாண்டு ரோஜா, மல்லி, சம்பங்கி, அரளி மற்றும் கேந்திப்பூ விளைச்சல் இருமடங்கு அதிகரித்துள்ளது. இருமாதங்களாக முகூர்த்த சீஸன், பண்டிகை திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து வந்ததால், பூக்கள் தேவை அதிகமாக இருந்தது. பூக்கள் வரத்தும் குறைவாக இருந்ததால், விலை ஏறுமுகமாகவே இருந்தது. இம்மாதம் துவக்கத்தில் இருந்தே பூ வரத்து அதிகரித்துள்ளது. பண்டிகை, முகூர்த்த சீஸன் இல்லாததால், விலையும் படிப்படியாக குறைகிறது. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காததால், மார்க்கெட்டுக்கு பூ வரத்து குறைந்து, வியாபாரிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

பூ மண்டி உரிமையாளர் மகேஷ் கூறியதாவது: தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, ஓசூர், சத்தி பகுதியில் தற்போது அனைத்து வகை பூக்கள் அறுவடை நடக்கிறது. சென்றாண்டை விட பூ விளைச்சல் இரு மடங்காக அதிகரித்துள்ளது. வரத்து அதிகரித்து நிலையில், பண்டிகை சீஸன் இல்லாததால் பூ விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல், "சென்ட்' ஆலைக்கு விற்பனை செய்கின்றனர்.

நேற்று ஒரு கிலோ "சூரியா ஆப்பிள்' மற்றும் "பட்டாம்பூச்சி' ரக ரோஜாப் பூ 120 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மல்லிகை 80 ரூபாய், அரளி 40 ரூபாய், செவ்வந்தி 60 ரூபாய், கோழிக்கொண்டை 50 ரூபாய், சம்பங்கி 60 ரூபாய்க்கு விற்பனையானது. இவ்வாறு அவர் கூறினார்.

**மஞ்சள் விலை தொடர்ந்து சரிவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,01:03 IST

ஈரோடு: வடமாநிலங்களில் மஞ்சள் தேவை குறைவாக இருப்பதால், மஞ்சள் விலை குறைந்து கொண்டே இருக்கிறது. ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில், 2010 டிசம்பர் மாதம் கடைசியில் 16 ஆயிரத்து 889 ரூபாய்க்கு மஞ்சள் விலை போனது. ஃபிப்ரவரி முதல் மார்க்கெட்டுக்கு புதிய மஞ்சள், இருப்பு வைக்கப்பட்ட பழைய மஞ்சள் அதிகளவு வரத்துவங்கியது. வடமாநிலங்களில் தேவை குறைவு, வரத்து அதிகம் காரணத்தால், மொத்த வியாபாரிகள் மஞ்சளை குறைந்த விலைக்கு ஏலம் எடுக்கின்றனர். சென்ற வாரத்தை விட குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய் வரை குறைந்துள்ளதால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

மார்ச் மாதம் துவக்கத்தில் இருந்தே புதுமஞ்சள் வரத்து மேலும் அதிகரித்துள்ளது. நேற்று ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 1,310 மூட்டை வரத்தானது; 789 மூட்டை மஞ்சள் விற்றது. விரலி அதிகபட்சமாக 10,949 ரூபாய், கிழங்கு 10,109 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. வெளிச்சந்தைக்கு 7,324 மூட்டை வரத்தானது; 1,343 மூட்டை மஞ்சள் விற்றது. விரலி 10,769 ரூபாய், கிழங்கு 10,265 ரூபாய்க்கு விற்றது. ஈரோடு கூட்டுறவு சொசைட்டிக்கு 1,035 மூட்டை வரத்தானது; 785 மூட்டை விற்றது. விரலி 11,311 ரூபாய், கிழங்கு 10,037 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மேலும் விலை குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**வெண்டைக்காய் விலை சரிவு:விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,00:18 IST

பொங்கலூர் : பொங்கலூர் பகுதியில், பெரும்பாலான விவசாயிகள் காய்கறி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். குறைந்த முதலீட்டில் ஓரளவு நல்ல வருமானம் கிடைக்கக்கூடியது வெண்டை. மூன்று மாத பயிரான வெண்டை, விதை நடவு செய்த 45 நாட்களில் காய்ப்புக்கு வந்து விடும். செடி காயும் வரை காய் விளைச்சல் இருந்து கொண்டே இருக்கும்.வெண்டையை ஏக்கர் கணக்கில் சாகுபடி செய்யும் விவசாயிகள் மிகவும் குறைவு. மற்ற காய்கறி பயிர்களுடன் கலந்து, கால் ஏக்கர், அரை ஏக்கர் என குறைந்தளவு நிலங்களில் மட்டுமே சாகுபடி செய்கின்றனர்.

தற்போது, அலகுமலை, பெரியாரியபட்டி, கிருஷ்ணாபுரம், ராமம்பாளையம், கொடுவாய் உள்ளிட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.வெண்டைக்காய்களை பறிக்கும்போது, ஏற்படும் அரிப்பு காரணமாக, கூலி ஆட்கள் கிடைப்பதில்லை. இதுவே, விவசாயிகள் சாகுபடி

பரப்பை குறைக்க காரணம்.கடந்த நான்கு மாதமாக, கிலோ 20 ரூபாய் வரை விற்பனையானது. இதனால், விவசாயிகள் வெண்டை சாகுபடி பரப்பை அதிகரித்தனர். மற்ற காய்கறிகள் விலை குறைந்ததாலும், வெண்டைக்காய் விளைச்சல் அதிகரித்ததாலும் தற்போது கிலோ ஆறு ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறுகையில், "வெண்டை பயிரிட ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு பிடிக்கும். நன்றாக பராமரித்தால், ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைக்கும். எச்சூழ்நிலையிலும் மற்ற பயிர்களை போல நஷ்டத்தை தராது. தற்போது, விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால், வருமானம் பாதியாக குறைந்து விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது,' என்றனர்.

**மானியத்தில் பாசிப்பயறு பெறலாம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,00:20 IST

வெள்ளகோவில் : நெல் அறுவடை முடிவடைய உள்ள நிலையில், விவசாயிகள் தானிய பயிர்களில் பயிரிட ஆர்வம் காட்டுவர். வெள்ளகோவில் வேளாண் துறை சார்பில் விவசாயிகளுக்கு உளுந்து மற்றும் பயறு வகைகள், ஊட்டச்சத்துக்கு டி.ஏ.பி., உரம் மானிய விலையில் வழங்கப்படுகிறது.வெள்ளகோவில் வட்டாரத்தில் கடந்த அக்., நவ., மாதங்களில் பயிர் செய்த நெல் அறுவடை நடந்து வருகிறது. 90 சதவீதம் நெல் அறுவடை முடிந்துள்ள நிலையில், பயறு, உளுந்து உள்ளிட்ட தானிய பயிர் கள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வேளாண் துறை சார்பில் வெள்ளகோவில், முத்தூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு உளுந்து, பயறு வகைகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. பயறு வகைகளில் நல்ல மகசூல் பெற டி.ஏ.பி., சிறந்த உரமாக உள்ளது. பூக்கும் பருவத்தில் தண்ணீருடன் கலந்து டி.ஏ.பி., தெளிக்கும்போது, பூ உதிர்வது தவிர்க்கப்பட்டு, பூக்கள் அனைத்தும் காயாக மாறு கின்றன. இதனால், பயறு வகைகளோடு சேர்ந்து டி.ஏ.பி., உரமும் வேளாண் துறை வழங்கி வருகிறது. வெள்ளகோவில் வட்டார விவசாயிகள், அந்தந்த பகுதி வேளாண் அலுவலகங்களை அணுகி மானிய விலையில், பயறு மற்றும் டி.ஏ.பி., பெறலாம் என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**புதிய திராட்சை ரகங்கள் பயிரிடும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,01:07 IST

தேனி : விவசாயிகள் புதிய ரக திராட்சை ரகங்களை பயிரிட்டு வருகின்றனர். தேனி மாவட்டம் ஓடைப்பட்டி பகுதியில் தாம்சன் ரக விதையில்லா திராட்சை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. தற்போது இங்குள்ள விவசாயிகள் மாணிக்சம்பா ரக விதையில்லா திராட்சை ரகத்தை அதிகம் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதேபோல் கம்பம் பகுதியில் பன்னீர் ரக திராட்சைக்கு பதிலாக சரத்சீட்லெஸ் என்ற கருப்பு ரக திராட்சை சாகுபடி அதிகரித்து வருகிறது. புதிதாக சாகுபடி செய்வது மட்டுமின்றி, ஏற்கனவே இருந்த பழைய ரக சாகுபடியினை அழித்து விட்டு, விவசாயிகள் மீண்டும் புது ரகங்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

**கடலை அறுவடையில் விவசாயிகள் : மழையின்றி குறைந்த விளைச்சல்**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,00:58 IST

பரமக்குடி : பரமக்குடி உரப்புளி, பொட்டிதட்டி, கருத்தனேந்தல் உள்ளிட்ட பல கிராமங்களில் கடலை அறுவடைசெய்யப்பட்டு வருகிறது. காக்கனேந்தலில் நேற்று முன்தினம் கடலை அறுவடை செய்யப்பட்ட போது, "கடந்த ஆண்டு 30மூடை விளைச்சல் கண்ட நிலங்கள், இந்த ஆண்டு ஐந்து மூடைகள் மட்டுமே கிடைத்துள்ளதாகவும், பச்சை கடலை கிலோ 7ரூபாயும், காய வைத்த கடலை கிலோ 30ரூபாய் வரை விலை போவதாகவும், இதன் செலவானது பன் மடங்கு அதிகரித்துள்ள நிலையில், இது போன்ற பயிர்களை மிஷின் கொண்டு அறுவடை செய்ய முடியாது என்பதால், கூலி ஆட்களை வைத்து செடிகளை பிடுங்கி, அதன் வேரில் இருந்து பிரித்தெடுக்க வேண்டியுள்ளது. இது போன்ற சுமைகளுக்கு மத்தியில் லாபம் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது,' என, கூறினர்.

**உளுந்து கடத்தல் அமோகம் கார்டுதாரர்கள் பரிதவிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,00:46 IST

சிவகங்கை : ரேஷன் கடைகளில் உளுந்து தட்டுப்பாடு நிலவுவதால், கார்டுதாரர்கள் அதிருப்தியில் உள்ளனர்.
சிவகங்கை மாவட்டத்தில் 639 ரேஷன் கடைகள் மூலம் 3.65 லட்சம் கார்டுதாரர்களுக்கு பொருட்கள் வினியோகம் செய்யப்படுகின்றன. கார்டிற்கு ஒரு கிலோ வீதம் குறைந்த விலைக்கு உளுந்து விற்கப்படுகிறது. இதற்காக மாதந்தோறும் 215 டன் உளுந்து கடைகளுக்கு வினியோகம்

செய்கின்றனர். வெளிமார்க்கெட்டில் கூடுதல் விலைக்கு விற்பதால், ரேஷன் கடைகளில் இருந்து வெளிமார்க்கெட்டில் கூடுதல் விலைக்கு விற்க, பருப்புகளை கடத்துகின்றனர். இதனால், மாதத்தின் முதல் வாரத்திலேயே பெரும்பாலான ரேஷன் கடைகளில் உளுந்து தீர்ந்துவிட்டது. இதனால், கார்டுதாரர்கள் உளுந்து கிடைக்காமல் அவதிக்குள்ளாகின்றனர்.

இதை தவிர்க்க, வெளிமார்க்கெட்டில் கூடுதல் விலை கிடைக்கும் பொருட்களை கடத்தும் விற்பனையாளர்களை "சஸ்பெண்ட்' செய்ய வேண்டும். இதன் மூலமே கார்டுதாரர்களுக்கு உரிய பொருட்கள் கிடைக்கும். இது குறித்து மாவட்ட வழங்கல் அலுவலர் ஆதிமூலம் கூறுகையில், "" நுகர்பொருள் வாணிப கழக குடோனில் இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்புவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், கடைகளில் பற்றாக்குறை நிலவுகிறது. தட்டுப்பாடு உள்ள கடைகளுக்கு முதலில் சரக்குகள் வழங்கப்படும்," என்றார்.

**சேரன்மகாதேவி வட்டாரத்தில் நெல் விதைகள் விநியோகம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,01:42 IST

திருநெல்வேலி : சேரன்மகாதேவியில் கோடை பருவ சாகுபடிக்கு ஏற்ற நெல் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன என வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் தெரிவித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் அறிக்கை:சேரன்மகாதேவி வட்டாரத்தில் நெற்பயிர் அறுவடையாகும் தற்போதைய தருணத்தில் உளுந்து, பாசிப்பயறு உள்ளிட்ட பயறு வகைப்பயிர்களை நெல் தரிசு நிலத்தில் பயிரிட்டு குறுகிய காலத்தில் மகசூல் பெறலாம். இப்பயிர்களில் வேர்முடிச்சுகள் உள்ளதால் மண்ணில் தழைச்சத்து நிலைநிறுத்தப்படும். சாகுபடி செய்யப்படும் நிலத்தின் வளம் அதிகரிக்கும்.

இப்பயிர்களை கலப்புப்பயிராகவும், ஊடுபயிராகவும் வரப்பு ஓரங்களில் பயிர் செய்யும் போது நன்மை செய்யும் பூச்சிகளான பொறிவண்டு அதிகம் காணப்படுவதால் பயிர்களை தாக்கும் தீங்கு செய்யும் பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும்.கோடை பருவ சாகுபடிக்கு ஏற்ற ஆடுதுறை 45, அம்பை 16 ரக நெல் விதைகள் சேரன்மகாதேவி, வீரவநல்லூர் வேளாண்மை விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேவைப்படும் விவசாயிகள் பெற்றுக்கொள்ளலாம். இவ்வாறு வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயசெல்வின் இன்பராஜ் தெரிவித்தார்.

**ஏலத்தில் தொடரும் விலை வீழ்ச்சி:தேயிலை விவசாயிகள் மத்தியில் கவலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,00:00 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் உள்நாட்டு, ஏற்றுமதி வர்த்தகர்களின் பங்களிப்பு குறைந்ததால் விலை வீழ்ச்சி தொடர்கிறது.குன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 10க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 11.19 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 7.78 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.41 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், வழக்கமாக பங்கெடுக்கும் பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு இந்த வாரம் முற்றிலுமாக இல்லை.

கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைந்ததால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 3 ரூபாய் சரிந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 27 சதவீதம் தேங்கியது. சி.டி.சி., ரக விற்பனையில் ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 156 ரூபாய் விலை கிடைத்தது; 75க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன; ஆர்தோடக்ஸ் ரகத்தில் கர்சன் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 195 ரூபாய் விலை கிடைத்தது; 35க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 44 - 56, சிறந்த ரக தூளுக்கு 85 - 130, டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 50-57, சிறந்த ரக தூளுக்கு 85 - 135 ரூபாய் விலை கிடைத்தது.

விற்பனை எண் 11க்கான ஏலம் வரும் 17, 18 தேதிகளில் நடக்கவுள்ளது. மொத்தம் 10.57 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள்ளது; இது கடந்த ஏலத்தை விட 1.62 லட்சம் கிலோ குறைவு.ஏலத்தில் விற்கப்படும் தேயிலை தூளின் குறைந்தபட்ச விலையை அடிப்படையாக கொண்டு தான், சிறு விவசாயிகள் தொழிற்சாலைக்கு வழங்கும் பசுந்தேயிலைக்கான விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

கடந்த மாதங்களில் ஒரு கிலோ தேயிலை தூளின் குறைந்தபட்ச விலை 48-50 ரூபாய் வரை இருந்தது. இதனால், விவசாயிகள் வழங்கும் பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 14-16 ரூபாய் வழங்கப்பட்டது. கடந்த இரு வாரமாக குறைந்தபட்ச விலை 44 ரூபாயாக இருப்பதால்,

பசுந்தேயிலைக்கு 11 ரூபாய் மட்டுமே விலை வழங்கப்படுகிறது. இது விவசாயிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## ரூ.2.20 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்

பதிவு செய்த நாள் : மார்ச் 14,2011,23:58 IST

குன்னூர் : ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பால், குன்னூர் தேயிலை ஏலத்தில், ரூ.2.20 கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கமடைந்தது.நீலகிரியில் உள்ள 150க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யும் தேயிலை தூள், வார இறுதி நாட்களில் குன்னூர் தேயிலை ஏல மையம் மூலம் விற்கப்படுகிறது. விற்பனையாகும் தேயிலை தூள், பாகிஸ்தான், ரஷ்யா, அமெரிக்கா, மேற்காசிய, வட ஆப்ரிக்க நாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மேற்காசிய, வட ஆப்ரிக்க நாடுகளான துனிசியா, எகிப்து, ஏமன், லிபியா, பக்ரைன், ஜோர்டான், சிரியா, மொராக்கோ, அல்ஜீரியா, ஓமன் நாடுகளில், தற்போது நிலவும் பல்வேறு பிரச்னைகளால், அந்நாட்டு வர்த்தகர்கள் தேயிலை ஏலத்தில் பங்கேற்பதில்லை. ரஷ்யாவில் நிலவும் கடும் பனிப்பொழிவால், அந்நாட்டின் நீர்வழிப் பாதைகள் உறைந்து போயுள்ளதால், அந்நாடும், தேயிலை இறக்குமதியை குறைத்து கொண்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டுக்கு, நேரடியாக தேயிலை வர்த்தகத்தை மேற்கொள்வதில் சில நிர்வாக சிக்கல் மற்றும் அந்நாட்டுடனான பண பரிவர்த்தனையில் பிரச்னைகள் இருப்பதால், பாகிஸ்தான் வர்த்தகமும் தடைபட்டுள்ளது. விளைவாக, குன்னூர் தேயிலை ஏல மையத்தில், இரு நாட்களுக்கு முன் நடந்த ஏலத்தில், விற்பனைக்கு வந்த 11.19 லட்சம் கிலோ தேயிலை தூளில், 2.97 லட்சம் கிலோ தூள் தேங்கியது; விற்பனை மதிப்பு 2.20 கோடி ரூபாய் என கணக்கிடப்பட்டுள்ளது.